
# உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு: ஆளுநர் பதவி விலக கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்!

‘திராவிட மாடல்’ முதலமைச்சரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை!

## ஆளுநர் ரவியை ஒன்றிய அரசே ‘டிஸ்மிஸ்’ செய்க!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஏப்.9-



தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி சட்ட விரோதமாகத் தொடர்ந்து நடந்துவரும் நடவடிக்கைகளை எதிர்த்து, தி.மு.க. அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க மகத்தான வெற்றி கிடைத்தது! இந்த அரிய முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ள ‘திராவிட மாடல்’ அரசின் முதலமைச்சரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு (தி.மு.க.) அரசு நிறைவேற்றி அனுப்பும் மசோதக்களுக்கு ஒப்புதல் அளிக்காமலும், திருப்பி அனுப்பாமலும், திசை திருப்பும் வகையிலும், அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கைகள் பலவற்றிற்கு எதிராக - தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி எடுத்த பதவிப் பிரமாண உறுதிமொழிக்கு முற்றிலும் மாறாகவும், முரணாகவும் நடந்துகொள்வதுபற்றி, அவரது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து, அவர் தனக்கு இல்லாத அதிகாரங்களைப் பயன்படுத்துவது முறைகேடு - அரசமைப்புச் சட்ட விரோதம் - இதற்கு உச்சநீதிமன்றம் நியாயம் வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு வாதாடியது தி.மு.க. அரசு.

இதை விசாரித்து, இன்று (8.4.2025) காலை உச்சநீதிமன்றத்தில் இரு நீதிபதிகள் ஜஸ்டிஸ் பார்திவாலா, ஜஸ்டிஸ் மகாதேவன் ஆகியோரைக் கொண்ட அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பின்படி (தற்போது ஊடகச் செய்திகள் வாயிலாக அறிந்துகொள்ளும் நிலையில்), முழு தீர்ப்புப்பற்றி பிறகு விரிவான அறிக்கை - அதனை முழுமையாகப் படித்துத் தருவோம் என்றாலும், தற்போது வந்துள்ள செய்திப்படி தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நிலைப்பாடு சரியானதே என்பதைப் புரிந்துகொள்ளும் வகையில் இன்றையத் தீர்ப்பு அமைந்துள்ளது.

**ஆளுநருக்கு ‘வீட்டோ’ அதிகாரம் கிடையாது!**

1. பஞ்சாப் அரசின் (ஆளுநர் அதிகாரம்பற்றியது) முந்தைய வழக்கிலும் உச்சநீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பு ஏற்கத்தக்க வழிகாட்டியாகும்.

2. ஆளுநர் (ஆர்.என். ரவிக்கு) ‘வீட்டோ’ அதிகாரம் - சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாவை - செயல்படவிடாமல் தடுக்கும் உரிமை கிடையாது என்று திட்டவட்டமாக தெளிவுபடுத்தியுள்ளது!

3. தன் இச்சைபோல அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களை காலவரையின்றி நிறுத்தி வைக்கக் கூடாது.

4. மற்ற சில அதிகார வாய்ப்புகள் தனி வழக்காகக் கருதப்படும் என்று எழுதப்பட்டுள்ளதாக - வந்த ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

இதன்மூலம் உச்சநீதிமன்றம் கூறியிருக்கும் தீர்ப்பின்மூலம் தெளிவாகின்ற கருத்து.

5. ஆளுநர் நிலுவையில் வைத்துள்ள பத்து மசோதாக்களும் செல்லும் என்ற தீர்ப்பு மிகச் சிறப்பானது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி எடுத்துள்ள நிலைப்பாடு சட்டப்படி சரியில்லை என்றே உறுதியாகக் தீர்ப்பளித்துள்ளனர் உச்சநீதிமன்ற நீதிபதிகள்!

ஆளுநரை, குடியரசுத் தலைவர் ‘டிஸ்மிஸ்’ செய்ய வேண்டும்!

இதன்படி, தனக்கு இல்லாத அதிகாரத்தை, இருப்பதாகக் கருதி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் சட்ட வலிமைக்கு, ஆட்சிக்கு எதிராக இதுவரை நடந்துகொண்டுள்ள ஆளுநரை, குடியரசுத் தலைவர் ‘டிஸ்மிஸ்’ (திரும்பப் பெறவேண்டும்) செய்ய வேண்டும் அல்லது அவரே ‘ராஜினாமா’ செய்து, வெளியேறவேண்டும் என்பது தானே பொருள்!

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு!**

அஃதின்றி, இந்த ஆளுநர் செயல்பாடுகள்பற்றி பேரறிவாளன் போட்ட வழக்கில், முன்பே உச்சநீதிமன்றத்தின் கண்டனமும் இத்துடன் நினைவிற் கொள்ளவேண்டிய ஒன்று என்பதால், தமிழ்நாட்டில் இந்த ஆளுநர் பதவியில் நீடிக்கும் ஒவ்வொரு வினாடியும், அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு முற்றிலும் எதிரான முன்னுதாரணமாகிவிடக் கூடும் ஆதலால் ஒன்றிய அரசும், மக்கள் மன்றமும் புரிந்து, இனி செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்!

இத்தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்தின் விதிகளை சரியானபார்வையுடன் பின்பற்றவேண்டிய ஒரு வரலாற்று முக்கியம் வாய்ந்த நடைமுறை இதன்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுத் தீர்ப்பினை (*Historical Landmark Judgement*) வழங்கிய உச்ச நீதிமன்றத்தையும், அதன் மாண்பமை நீதிபதிகள், ஜஸ்டிஸ் பார்தி வாலா, ஜஸ்டிஸ் மகாதேவன் ஆகியோரையும் பாராட்டுகின்றோம்!

**முதலமைச்சரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை!**

இந்தத் தீர்ப்புமூலம் இந்தியா முழுமைக்கும் உள்ள மாநில சட்டப்பேரவைகளின் அதிகாரத்தைக் காப்பாற்றி, தடம்புரண்ட ஜனநாயகத்தை மீண்டும் தடத்தில் ஏற்றிய தனிப்பெரும் சாதனையைச் செய்த நமது ‘திராவிட மாடல்’ அரசின் ஒப்பற்ற முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை!

இதன் பயன் இந்தியாவின் அனைத்து மாநில சட்டப்பேரவைகளின் உரிமை காப்பாற்றப்பட்டு, ஜனநாயகம் பிழைத்துள்ளது. பல பல்கலைக் கழகங்களுக்கும் ஒரு விடியல் இதன்மூலம் கிடைக்கும் என்பது உறுதி!

இவ்வாறு கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதா?

## ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு உச்சநீதிமன்றம் சாட்டையடி!

### கு.செல்வப் பெருந்தகை அறிக்கை!

சென்னை, ஏப். 9 -



அரசியலமைப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதா என்று குறிப்பிட்டு உச்சநீதிமன்றம் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு சாட்டையடி வழங்கி உள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப் பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு. செல்வப்பெருந்தகை இந்தத் தீர்ப்பைப் பாராட்டி கூறியதாவது:

தமிழக ஆளுநரின் மக்கள் விரோத நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் கண்டித்துள்ளதுடன், சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட மசோதாக் களுக்கு ஒப்புதல் அளிப்பதை வேண்டுமென்றே தாமதப்படுத்தியதற்காக அவருக்கு ஒரு அறிவுரையையும் வழங்கியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு அனைத்து அதிகாரங்களும் உள்ளன என்றும், நியமிக்கப்பட்ட பெயரளவிலான தலைவருக்கு சில அதிகாரங்கள் மட்டுமே உள்ளன என்றும் உச்ச நீதி மன்றம் உறுதி செய்துள்ளது.

இந்த உத்தரவின் மூலம், அரசியலமைப்பை நீர்த்துப்போகச் செய்யும் பா.ஜ.க.வின் செயல்பாடுகளுக்கு உச்சநீதிமன்றம் ஒரு சாட்டையடியை விதித்துள்ளது .

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழக ஆளுநரை உடனே பதவியிலிருந்து நீக்குக!

### மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ..சண்முகம் அறிக்கை!

சென்னை, ஏப்.9-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய 10 மசோதாக்களுக்கு நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் காலம் கடத்தி வந்த தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயலுக்கு உச்சநீதிமன்றம் தனது கடும் கண்டனத்தை தெரிவித்ததோடு, சிறப்பு சட்டம் பிரிவு 142ஐ பயன்படுத்தி அம்மசோதாக்களுக்கு ஒப்புதலையும் வழங்கியுள்ளது. உச்சநீதிமன்றத்தின் இத்தக்கைய வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வரவேற்கிறது. இது கூட்டாட்சி கோட்பாட்டிற்கு வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்ற நாளிலிருந்தே தமிழ்நாட்டின் நலன்களுக்கு எதிராக தொடர்ச்சியாக பேசி வருவதையும், அரசியல் சாசனத்தின் மாண்புகளை மீறி தன்னிச்சையாக செயல்படுவதையும் வாடிக்கையாக கொண்டிருந்தார். மேலும் தமிழக சட்டமன்றத்தின் கண்ணியத்தை குலைக்கும் செயல்களில் ஈடுபட்டதோடு, தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் மசோதாக்களுக்கு அரசியல் உள்நோக்கத்தோடு ஒப்புதல் அளிக்காமலும் காலம் கடத்தி வந்தார். இந்நிலையில் தமிழ்நாடு அரசு ஆளுநரின் நடவடிக்கையை கண்டித்தும், சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கக் கோரியும் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஆளுநரின் நடவடிக்கை சட்டவிரோதமானது, தன்னிச்சையானது எனத் தனது கடும் கண்டனத்தை தெரிவித்ததோடு, அம்மசோதாக்களுக்கு ஒப்புதலையும் வழங்கி உத்தரவிட்டுள்ளது. மாநில அரசு நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான கால வரம்பை நிர்ணயித்து நாடு முழுவதும் ஆளுநர்கள் தன்னிச்சையான போக்கிற்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.



உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து மாநில உரிமையை பாதுகாப்பதற்கான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ்நாடு அரசையும் பாராட்டுகிறோம். மேலும் அரசியல் சாசனத்திற்கும், தமிழக நலன்களுக்கும் எதிராக தொடர்ச்சியாக செயல்பட்டு வரும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைகளுக்கு கடுமையான கண்டனத்தை உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள நிலையில், குடியரசு தலைவர் அவர்கள் தமிழக ஆளுநர் பொறுப்பிலிருந்து அவரை உடனடியாக நீக்க வேண்டுமெனவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் ரவி விவகாரம்: உச்சநீதிமன்றத் தீர்ப்பு!

## முதல்வரின் பொறுமையை இன்று நாடே பாராட்டுகிறது!

### இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் அறிக்கை!

சென்னை, ஏப்.9-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அறிக்கை வருமாறு:

2025 ஏப்ரல் 8 செவ்வாய்க் கிழமை இந்திய உச்சநீதிமன்றம் அளித்திருக்கும் ஆளுநர் பற்றிய தீர்ப்பு, உச்சியில் வைத்து ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் காலமெல்லாம் கொண்டாடும்படியான அதி அற்புத தீர்ப்பாகிவிட்டது.

திராவிட மாடல் நல்லாட்சி நடத்திவரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எதையும் எப்போதும் என்றென்றும் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆதரிப்பதும் எதிர்ப்பதும் ஒத்துப்போவதும் வேறுபட்டு நிற்பதும் தனது அரசியல் வாழ்க்கையாகக் கொண்டு, நாடும் ஏடும் நானிலமும் ஏற்றுப்போற்றும் வகையில் செயல்பட்டு வருகிறார். இன்றைய அரசியல் தலைவர்களுக்கெல்லாம் எழிலார்ந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறார்.



தமிழக ஆளுநர் ஆர். என். ரவி விவகாரத்தில் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வந்த பொறுமை மிகுந்த பொன்னான சட்ட வழிமுறை இன்றைக்கு இந்தியா முழுவதும் பாராட்டுபடியானதொரு அணுகுமுறை என்பதை நிரூபித்திருக்கிறது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டவிதி 200 கூறுவது இதுதான். மாநில சட்டப்பேரவை எடுக்கும் முடிவுகளை மசோதாகளை

## மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் இழுத்தடிக்கும் ஆளுநர்களின் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி!

### உச்சநீதிமன்றத் தீர்ப்பு குறித்து பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் பேட்டி!

சென்னை, ஏப். 9 -

மாநில அரசுகளின் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் இழுத்தடிக்கும் ஆளுநர்களின் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணம் உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்துள்ளது என்று பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாநில அரசுகள் நிறைவேற்றி அனுப்பும் சட்ட மசோதாக்களை தங்களிஷ்டப்படி நிறுத்தி வைக்கும் மாநில ஆளுநர்களின் செயல்பாடுகளுக்கு உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.



இனி அதிகப்பட்சம் 4 மாதங்களுக்கும் மிகாமல் எந்த வொரு சட்ட மசோதாவையும் நிலுவையில் வைத்திருக்கக் கூடாது என்பதையும் இத்தீர்ப்பு உறுதி செய்கிறது.

உச்சநீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பு - மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரத்தை அளித்துள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன் வடிவுகளை, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பும்போது, ஆளுநர் ஒப்புதல் அளிக்கவோ, அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவோ, அல்லது திருப்பி அனுப்பவோ செய்வதற்குரிய காலக்கெடு `கூடிய விரைவு' என்று விதித்திருக்கிறது. இந்த `கூடிய விரைவு' `அஸ் ஸூன் அஸ் பாஸிப்பில்' என்பதற்கான அருத்தம் இதுவரை தெரியாமல் இருந்தது. அதற்குரிய விடிவு இன்றைக்கு உச்சநீதிமன்றம் தெரிவித்துவிட்டது.

ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் தாம் என்று தெரிவித்த உச்சநீதிமன்றம் வாழ்க! உச்சநீதிமன்றத்திற்குச் சென்று வென்றுள்ள தமிழக முதலமைச்சர் என்றும் வாழ்க! என்று குறிப்பிட்டுள்ளார்.

வஃக்பு சட்டம் நிறைவேற்றம்!

## ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்துவிட்டது ஒன்றிய அரசு!

### அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஏப்.7

திண்டுக்கல் வடக்கு ஒன்றிய கழக மாவட்ட இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து பொதுக்கூட்டம் நடந்தது. திண்டுக்கல் உழவர் சந்தை அருகே நடந்த இந்த பொதுக்கூட்டத்துக்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாநகர செயலாளர் ராஜப்பா, மாநகராட்சி துணை செயலாளர் இளமதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், தெற்கு ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் மாநில தலைமை கழக பேச்சாளர்கள் மதுரை பாலா, சுபாஷினி ஆகியோர் கலந்துகொண்டு மத்திய அரசின் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பு அநீதி ஆகியவை குறித்து பேசினர். கழகத் துணைப் பொதுச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார்.



அப்போது அவர் பேசியதாவது:

இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயல்படும் மாநிலம் தமிழகம் தான். முதல் அமைச்சர் திறம்பட செயல்பட்டு அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றி உள்ளார். தமிழகத்தில் இந்தி மொழியை திணிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் கனவு ஒருநாளும் பலிக்காது. ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்துவிட்டு சர்வாதிகாரத்தை கொண்டு வர வேண்டும் என்பதற்காக தான் மாநிலங்களவையில் வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா நிறை வேற்றப்பட்டுள்ளது.

தங்கள் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தாய் திட்டத்தையே நிறுத்தி விட்ட அ.தி.மு.க.வுக்கு கழகத்தை பேச என்ன தகுதி இருக்கிறது. கழக ஆட்சியில் தான் உள்ளாட்சிகளுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு மாநிலங்களின் அதிகாரங்களை பறிக்க முயல்கிறது. அதை தடுக்கவே முதல்அமைச்சர் போராடுகிறார். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கிழக்கு மாவட்ட செயலாளர் இ பி செந்தில்குமார் பேசியதாவது

தென் மாநிலங்களின் பிரதிநிதித்து வத்தைக் குறைக்கும் வகையில் தொகுதி மறுவரைத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தத் திட்டமிட்டு வருகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழகம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

ஜிஎஸ்டி வரியில் 36 சதவீதம் பங்களிப்பு வழங்கும் தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு 27 சதவீதத்தை மட்டுமே திருப்பி அளிக்கிறது. ஆனால், 20 சதவீதம் பங்களிப்பு கொண்ட வட மாநிலங்களுக்கு 42 சதவீதம் வழங்கப்படுகிறது. இந்த வகையில், நிதிப் பகிர்வில் மத்திய அரசு பாரபட்சமாக செயல்பட்டு வருகிறது.

‘நீட்’ தேர்வு காரணமாக தமிழ்நாட்டில் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். ‘நீட்’ தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே இருப்பதால்தான், தமிழக அரசு சார்பில் சட்டரீதியான அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், பிலால் உசேன் ,முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சத்தியமூர்த்தி, நகர நிர்வாகிகள் ராஜேந்திரகுமார் ,பஜலுல் ஹக் ஆனந்த், ஜானகிராமன், மீடியா சரவணன், பொதுக் குழு உறுப்பினர் அக்பர், சார்பு அணி நிர்வாகிகள் இல கண்ணன், முருகானந்தம், இளைஞர் அணி நிர்வாகிகள் கொடைக்கானல் மாயக்கண்ணன், ரெட்டியார்சத்திரம் ராஜேஷ் பெருமாள்,டாக்டர் அமிர்தகடேஸ்வரர் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பழனிச்சாமி, கதிரேசன், காளிதாஸ், ரகுமான், பொன்ராமன், சுதந்திரவள்ளி, சுரேஷ்குமார், மாணவரணி நிர்வாகி ராஜா உள்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

காரைக்கால் மாநிலம் - தஞ்சாவூர் மத்திய மாவட்ட பொறியாளர் அணி

## மாநகர் / நகர / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

### மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெறும்.

நாள் : 10.04.2025 (வியாழக் கிழமை) நேரம் : மாலை 5.00 மணிக்கு

இடம் : ஹோட்டல் அட்லாண்டா (பேருந்து நிலையம் அருகில்) காரைக்கால்.

தலைமை : ஏ.எம்.ஹச் நாஜிம் எம் எல் ஏ, மாநில அமைப்பாளர் காரைக்கால்.

நாள் : 13.04.2025 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : காலை 10.00 மணிக்கு

இடம் : மாவட்ட தி.மு.க. அலுவலகம் அண்ணா அறிவாலயம், தஞ்சாவூர்

தலைமை : துரை சந்திரசேகரன் எம் எல் ஏ, மாவட்ட கழக செயலாளர், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.

மாநகர்/நகர /ஒன்றிய /பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**

மாநிலச் செயலாளர்,

தி.மு.க. பொறியாளர் அணி